## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

மூன்றாம் வருட/இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2016/2017 (நவம்பர்/டிசெம்பர் 2019)

## HCS 3233 Introduction to Heterodox System of Hindu Philosophy

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி – I இல் இருந்து இரண்டு வினாக்களையும் பகுதி – II இல் இருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

### பகுதி – I

01. தமிழகத்தில் பௌத்த சமயம் பெற்றிருந்த செல்வாக்கினை மேல்வரும் தலைப்புகளில் பரிசீலிக்குக.

    (அ) பௌத்த அறிஞரும் பௌத்தப் பள்ளிகளும் (07 புள்ளிகள்)
    (ஆ) பௌத்தச் சின்னங்கள் (07 புள்ளிகள்)

02. "சமண சமய தத்துவங்களை மக்கள் மத்தியில் பரப்பியதில் தீர்த்தங்கரர்களுக்கு முக்கிய பங்குண்டு" இக்கூற்றினை ஆதாரமாகக் கொண்டு பின்வருவனவற்றை மதிப்பிடுக.

    (அ) தீர்த்தங்கரர்களும் அறமும் (07 புள்ளிகள்)
    (ஆ) சீவனும் அசீவனும் (07 புள்ளிகள்)

03. "இந்துசமயமும் பௌத்த சமயமும் பரஸ்பர தொடர்புகளைக் கொண்டே வளர்ச்சி பெற்றன" என்ற கூற்றின் பொருத்தப்பாட்டினை மேல்வருவனவற்றின் அடிப்படையில் ஆராய்க.

    (அ) இந்து சமயத்தினின்றும் உருவாகிய பௌத்தம் (07 புள்ளிகள்)
    (ஆ) இந்து சமய பாரம்பரிய பின்னணியில் பௌத்தம் (07 புள்ளிகள்)

### பகுதி – II

04. "உலகாயதத்தின் அடிப்படைக் கொள்கைகள் பொருள் முதல்வாத சிந்தனையை உள்வாங்கியனவாகவே அமைகின்றன" இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

    (24 புள்ளிகள்)

05. "ஆசீவகத்தின் கொள்கைகள் மெய்யியல் நோக்கிலானவை" எனக் கூறப்படுகின்ற கூற்றின் பொருத்தப்பாட்டினைப் பரிசீலனை செய்க.

    (24 புள்ளிகள்)

06. தமிழ் நாட்டில் சமணசமயம் தோன்றி வளர்ந்தவாற்றினை தகுந்த ஆதாரங்களுடன் விளக்குக.

    (24 புள்ளிகள்)

07. பௌத்தம் ஒரு சமயநெறியாக வளர்ச்சி பெற்றமையினை சுருக்கமாகக் குறிப்பிட்டு மகாயான பௌத்தத்தின் அடிப்படைக் கொள்கைகளை பரிசீலிக்குக.

    (24 புள்ளிகள்)

*****